# வருடாந்த அறிக்கை

# 2016

## புத்தசாசன நிதியம்

இல.135
சிறீமத் அநாகரிக தர்மபால மாவத்தை
கொழும்பு 07

தொலைபேசி - 0112303293
மின்னஞ்சல் - bsfund@mbs.gov.lk
இணைய தளம் - www.mbs.gov.lk/si/com-akeeba/buddhasasana-fund

# உள்ளடக்கம்

பக்க இல.

**01. புத்தசாசன நிதியம்**

1.1 நோக்கு 1

1.2 செயற்பணி 1

1.3 நோக்கங்கள் 1

1.4 செயற்பாடு 1

1.5 சட்ட வரைமுறைகள் 2

**02. நிருவாக கட்டமைப்பு** 3

**03. பதவியினர்** 3

**04. செயலாற்றுகை முன்னேற்றம்**

4.1 புதிய பிக்கு நிறுவனங்களின் பேணுகைக்கான நிதிசார் உதவுகைகளினை வழங்குதல் 4-5

4.2 புதிய பிக்கு நிறுவனங்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகளினை நடாத்துதல் 6-7

4.3 குறைவிருத்தியுடைய விகாரைகளுக்கான சுகாதார நலன் பேணுதல் வசதிகளுக்கான உதவுகையினை வழங்குதல் 7-8

4.4 சம்புத்த ஜயந்தி சமனீர புலமைப்பரிசில் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 9

4.5 தம்பதீவவிலுள்ள வணக்க தலங்களிலுள்ள வயதான துறவிகளுக்கு வாய்ப்புக்களை வழங்குதல் 10

4.6 பிக்கு வைத்திய உதவி நிகழ்ச்சித்திட்டம் 10-11

4.7 தமது வயது முதிர்ந்த காலப்பகுதியில் துறவு நிலைக்கு வருகின்ற துறவிகளுக்கான செயன்முறைப் பரீட்சையினை வழங்குதல் 12

4.8 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான நிகழ்ச்சித்திட்ட உதவுகை 13

**05. எதிர்கால இலக்குகள்** 13

**06. நிதி முகாமைத்துவம்**

6.1 வருமான மற்றும் செலவின் கணக்கு 14-15

6.2 மீதியினை செவ்வை பார்த்தல 16-18

6.3 ஐந்தொகை 19

6.4 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 20-25

# 01. புத்தசாசன நிதியம்

## 1.1 நோக்கு

பௌத்த மதத்தின் கொள்கைகளையும் விழுமியங்களையும் நிலை நிறுத்தும் நல்லொழுக்கமும் இறை நம்பிக்கையும் நிறைந்த சமுதாயத்தினை உருவாக்குதல்.

## 1.2 செயற்பணி

சம்புத்தாசனத்தினைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக துறவிகளின் ஆன்மீக மற்றும் சமூக மேம்பாட்டிற்குப் பங்களிப்பினை வழங்குவதோடு விகாரைகளின் வசதிகளினை மேம்படுத்தி புத்தசாசனத்தின் ஸ்திரத்தன்மைக்கான நடவடிக்கைகளினை எடுத்தல்.

## 1.3 நோக்கங்கள்

I. புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

II. புத்தசாசனத்தினை வளர்த்தெடுப்பதற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.


## 1.4 நிதியத்தின் செயற்பாடுகள்

1. 5 இற்கு மேற்பட்ட புதிய துறவிகளுக்கு புதிய துறவிகளுக்கான அறிவூட்டலினை வழங்கி வருகின்ற நிறுவனங்களுக்கு மாதாந்த நிதிசார் உதவுகையினை வழங்குதல்.
2. புதிய நிறுவனங்களிலுள்ள புதிய பிக்குகளின் தம்ம சார்ந்த அறிவு மற்றும் நடைமுறைகளின் வருடாந்த மதிப்பாய்வு.
3. நாடு பூராகவும் குறைந்த வசதிகளுடன் காணப்படுகின்ற விகாரைகளுக்கான பௌதீகசார் தேவைகளினை வழங்குதல்.
4. சம்பத்துவ ஜயந்தி சமனெற அனுசரணை நிகழ்ச்சித்திட்டம்
5. தம்பதிவ புனிதப் பிரதேசங்களுக்கான பாதயாத்திரையில் ஈடுபட்டிருக்காத வயதான துறவிகளுக்கான வாய்ப்பினை வழங்குதல்.
6. துறவிகளுக்கான மருத்துவ உதவித் திட்டத்தினை அமுல்படுத்துல்.
7. துறவறத்தில் ஈடுபட்டு வரும் வயதான மற்றும் வயது குறைந்த துறவிகளுக்கு தம்மம் மீதான அறிவினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
8. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள விகாரைகள் / ஆண் துறவி மடங்களின் அடிப்படை வசதிகளினை மேம்படுத்துதல்.

## 1.5 நிதியத்தினை தாபிப்பதில் காணப்படும் சட்ட வரையறைகள்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 9 ஆவது உறுபுரையானது, "இலங்கைக் குடியரசு பௌத்தத்திற்கு முதன்மையான இடத்தை வழங்குவதுடன், அனைத்து மதங்களுக்கும் உறுதியளிக்கும் அதே வேளையில் உறுப்புரைகள் 10 மற்றும் 14(1) (ஈ) இனால் அளிக்கப்பட்டுள்ள அனைத்து சமயங்களினதும் உரிமைகளினைப் பாதுகாத்து வளர்ப்பது அரசின் கடமையாகும்.


அந்த தொழிற்பாட்டிற்கு இணங்க, புத்தசாசன நிதியமானது 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் புத்தசாசனத்தைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் நிதி திரட்டவும் தொகுக்கவும் தாபிக்கப்பட்டதாகும். மேற்படி சட்டத்தின்படி, புத்தசாசன நிதியம் புத்தசாசனத்தைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை நிருவகிப்பதற்கும் உதவுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் மேலும் நிதியத்தின் தொழிற்பாட்டினை எளிதாக்கும் ஏனைய அனைத்து ஆக்கபூர்வமான மற்றும் தற்செயலான நடவடிக்கைகள் மற்றும் விடயங்களையும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.



ශ්‍රී ලංකා
ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ
පාර්ලිමේන්තුව

1990 අංක 35 දරන
බුද්ධ ශාසන අරමුදල පනත

# 02. நிருவாக கட்டமைப்பு




# 03. பதவியினர்

1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இல. புத்தசாசன நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 7 (ஊ) மற்றும் 14 இன் கீழ் கட்டுப்பாட்டுச் சபையினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கமைவாக, நிதியத்தின் பிரதம நிறைவேற்றுனராக நியமிக்கப்பட்ட செயலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். செயலாளரானவர் பிரதம கணக்கீட்டு அலுவலராகவும் விளங்குவதுடன் செயலாளரானவர், தேவையான போதெல்லாம், புத்தசாசன அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரசாங்க பதவிநிலை உத்தியோகத்தர்களிலிருந்து பெயர் குறிப்பீடு செய்யப்படுதலும் வேண்டும்.

அதற்கிணங்க, இலங்கை நிருவாக சேவையின் தரம் 1 இனைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர்தனது கடமைகளுக்கு மேலதிகமாக இந்தச் செயலாளர் பதவினையும் வகிப்பார். அத்துடன் அமைச்சின் பதவியினரும் நிதியத்தின் செயற்பாடுகளுக்கான ஆதரவினை வழங்கி வருகின்றார்கள்.

# 04. நிதியத்தின் செயலாற்றுகை

## 4.1 புதிய பிக்கு நிறுவனங்களுக்கான நிதி உதவுகையினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

லௌகீக வாழ்க்கையை விட்டு துறவு வாழ்வில் சேரும் பிள்ளையொன்று சிறிது காலத்திற்குப் பிறகு பிரிவேனா கல்விக்கு அனுப்பி வைக்கப்படும். ஒரு குழந்தை இரண்டு அல்லது மூன்று வருடங்கள் விகாரையில் தங்கியிருந்து, துறவியின் வாழ்க்கையைப் பற்றியும், தம்மத்தைப் பற்றியும் புரிந்துகொண்டு தானாக முன்வந்து துறவு வாழ்க்கையில் நுழைவது வழக்கமாகும். ஆனால் தற்போது, குருத்துவ வாழ்வில் நுழையும் குழந்தைகளுக்கு, துறவியாக இருப்பதற்கு முன், துறவற வாழ்க்கையைப் பற்றிய புரிதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இத்தகைய தேவையை புரிந்து கொண்டு புத்தசாசன நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தித் திறன் சார்ந்த கருத்திட்டமாக இந்த புதிய பிக்கு கல்வித் திட்டத்தை அடையாளப்படுத்த முடியும். ஒரு புதிய பிக்கு நிறுவனத்தின் நோக்கமானது சிறு பராயத்தினைக் கொண்ட புதிய துறவிகளுக்கு பிக்கு மதத்தின் மீது அன்பை வளர்ப்பது, ஒரு பிக்குவின் வாழ்க்கையில் நல்ல அணுகுமுறைகளை உருவாக்குவது மற்றும் சடங்குகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவு நிறைந்த ஒரு பிக்குவை உருவாக்குவதேயாகும்.


தசா தம்ம சூத்திரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதன்படி, ஒரு முழுமையான பிக்குவை சமூகத்திற்கு முன்வைப்பதில் புதிய பிக்கு நிறுவனம் ஈடுபட்டுள்ளதுடன் ஒரு பிக்குவின் வாழ்க்கை என்பது பௌத்த நடைமுறைகளுக்கமைவாகவும் ஒரு பிக்குவுக்கும் சாதாரண மனிதனொருவனுக்குமிடையிலான வித்தியாசத்தின்படி அமையப் பெற்ற வாழ்க்கை என்பதை புரிய வைக்கின்றதுடன் பிக்குவின் மேலாதிக்கம், பிறருக்குச் சுமையாக இல்லாமல் பிக்கு வாழ்வினை வாழ்வதற்கான வழியினைப் போதிக்கின்றது.

**<u>உதவுகையினைப் பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள்</u>**

I. அறநெறிப் பாடசாலை தவிர்ந்த வேறு எந்தப் பாடசாலையும் விகாரையினுள் நடாத்தப்படுதலாகாது.
II. அங்கே மும்மணிகளும் இருத்தல் வேண்டும்.
III. புதிய துறவிகள் வதிவிடங்களிலேயே கல்வி கற்றல் வேண்டும்.
IV. தங்குமிட வசதிகள், நீர், மின்சாரம், கழிவறைகள் போன்ற வதிவிடங்களுக்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் காணப்படுதல் வேண்டும்.
V. விகாரையானது, காலையுணவு மற்றும் மதிய உணவுகளுக்காக போதுமான உணவுகளை வழங்குவற்கான பங்களிப்பினைச் செய்பவர்களினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
VI. இளம் புதிய துறவிகளை பயிற்றுவிப்பதற்கு கற்றறிந்த மற்றும் நல்லொழுக்கமுள்ள ஆசான் பிக்கு ஒருவர் இருத்தல் வேண்டும்.

## 2016 ஆம் ஆண்டில் நிதி உதவுகை அளிக்கப்பட்ட நிறுவனங்கள்

| தொடர் இல. | நிறுவனம் (பெயர், முகவரி) | நிறுவனங்களிலுள்ள புதிய துறவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பள்ளேபொல சிறிசரிபுத்த புதிய பிக்குகள் நிறுவகம். | 05 |
| 02 | மிஹிந்து புதிய பிக்குகள் நிறுவகம் | 12 |
| 03 | குண்ணேபன சிறி தம்மபல புதிய பிக்குகள் நிறுவகம் | 06 |
| 04 | சிறிசுதஸ்ஸி புதிய பிக்குகள் நிறுவகம், காலி. | 19 |
| 05 | வித்தியதீப புதிய பிக்குகள் நிறுவகம், காலி | 05 |
| 06 | சிறி பரக்கும் புதிய பிக்குகள் நிறுவகம், அமுனுகொட | 05 |
| 07 | சிறி தம்மரத்ன புதிய பிக்குகள் நிறுவகம், கண்டி | 12 |
| 08 | சம்புத்தலொக்க புதிய பிக்குகள் நிறுவகம், அம்புல்புர | 09 |
| 09 | ஜினரத்ன புதிய பிக்குகள் நிறுவகம், தம்புள்ள | 10 |
| 10 | வித்தியாவன்ஸ புதிய பிக்குகள் நிறுவகம் | 11 |
| 11 | இந்திரஜோதி புதிய பிக்குகள் நிறுவகம், களுத்துறை | 05 |
| 12 | மகா மசிந்த புதிய பிக்குகள் நிறுவகம் | 06 |
| 13 | சுதம்மானந்த புதிய பிக்குகள் நிறுவகம், கட்டுகஸ்தோட்டை | 19 |
| 14 | சிறி ஆரியவன்ஸ புதிய பிக்குகள் நிறுவகம் தங்காலை | 11 |
| | **மொத்தம்** | **135** |







## 4.2 புதிய பிக்கு நிறுவனங்களின் வருட இறுதியில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம்.

இந்தப் புதிய பிக்கு நிகழ்ச்சித்திட்டமானது புத்தசாசன நிதியம் தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தித் திறன் வாய்ந்த கருத்திட்டமொன்றாக தெளிவாக அடையாளங் காணப்பட முடியும். புதிய பிக்கு நிறுவனமொன்றின் நோக்கங்களாக, புதிய பிக்குகளின் அன்பினை அதிகரித்தல், பிக்கு ஒருவரின் வாழ்வினை நோக்கியதான சிறந்த நற்பண்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் சடங்கு மற்றும் நடைமுறைகள் தொடர்பான அறிவில் போதுமான அறிவினைக் கொண்டுள்ள பிக்கு ஒருவரினைத் தோற்றுவித்தல்.

இத்தகைய நோக்கங்களுக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட புதிய துறவிகளின் அறிவு மற்றும் அவர்களின் நடத்தை என்வற்றினைப் ஆய்வு செய்யும் நடவடிக்கையானது இங்கே மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, போதுமான பயிற்சியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஒவ்வொரு வரு இறுதியிலும் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமையினைப் பெறுகின்றார்கள். இத்தகைய மதிப்பீட்டில், எழுத்து மூலமான பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை என்பனவும் நாயக்க தேரர்களினைக் கொண்ட விசாரணைச் சபையினால் நடாத்தப்படும். புத்தசாசன நிதியமானது இந்தப் பரீட்சையில் அதிவிசேட மற்றும் மிகச் சிறந்த சித்தியினைப் பெற்றுக் கொள்கின்ற புதிய துறவிகள் தொடர்பில் விசேட மதிப்பாய்வினை நடாத்துகின்றது.

அமுல்படுத்தப்படும் முறை


1. பதிவு செய்யப்பட்ட பிக்கு நிறுவனங்களிலிருந்து பரீட்சைக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
2. பரீட்சை நடவடிக்கைகளினை ஒழுங்கமைத்தல்
3. பரீட்சைகளினை நடாத்துதல்
4. புலமைப் பரிசில்களை பரிசளித்தல்






**2016 இற்குரியதும் 2017 இல் நடாத்தப்பட்டதுமான பரீட்சை தொடர்பான தகவல்கள்**

| | |
|---|---|
| ❖ பரீட்சை நடாத்தப்பட்ட இடம் | களனி, பேலியகொடை, உதயலங்கர பிரிவென. |
| ❖ பரீட்சை நடாத்தப்பட்ட திகதியும் நேரமும். | 2017.01. 28 (පෙ.ව 9.00 - ප.ව 3.00) |
| ❖ பரீட்சைக்குத் தோற்றிய துறவிகளின் எண்ணிக்கை | 54 |
| ❖ செலவிட்ட தொகை | ரூபா.103,720/= |



எழுத்து மூல பரீட்சை




வாய்மூல பரீட்சை

## 4.3 குறைவிருத்தியடைய விகாரைகளுக்கான சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குதல்

அடிப்படை வசதிகள் இல்லாத பல்வேறு விகாரைகள் நாடு பூராகவும் உள்ளன. எனவே, இந்தக் கருத்திட்டத்தின் நோக்கம், சுகாதார நலன் பேணல் சதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளின்றி காணப்படும் துறவிகள் வசிக்கும் விகாரைகளினை மேம்படுத்துவதேயாகும்.

வருடமொன்றுக்கு ஒரு பிரதேச செயலாளர் பிரிவானது தெரிவு செய்யப்பட்டு அங்கே அப்படை வசதிகளின்றி காணப்படும் ஒரு விகாரைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கமைவாக இந்த வசதிகள் வழங்கப்படுவதுடன் பிரதேச செயலாளர் / பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பாளரின் பரிந்துரையுடன் புத்தசாசன நிதியத்திற்கு கிடைக்கப் பெறும் கோரிக்கைகளுக்கிணங்க, தெற்கான நிதி உதவுகையானது வழங்கப்படுகின்றது.





**சுகாதார நலன் பேணல் வசதிகளுக்காக நிதிஉதவுகை அளிக்கப்பட்ட விகாரைகள்**

| தொடர் இல. | விகாரையின் பெயர் | முகவரி | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | சிறி வர்த்தனரமி | வடவலக்கந்த, கொபொநில்ல | 100,000 |
| 2 | பூரண கலன் விகாரை | உடுவெல, கஹதலியட்ட | 100,000 |
| 3 | சிறி கேத்தாராம விகாரை | தலகுனே, உடுடும்பர | 100,000 |
| 4 | சிறி ரத்னாலோக விகாரை | ஆடிடெனிய, கஹடலியட்ட | 100,000 |
| 5 | சிறிசிபதனராம விகாரை | சலியல, உடுடும்பர | 100,000 |
| 6 | சிறி சுதரசனராம விகாரை | அலுகொல்ல, ஹேவாதிவல | 100,000 |
| 7 | சிற தலதகமன் விகாரை | கெவுல்கம, ஹுுனஸ்கிரிய | 100,000 |
| 8 | சிறி அபினவரமய | ஒயாதென்ன, போப்பிட்டிய | 100,000 |
| 9 | சிறி தர்மராமய | மஹாவல, உடுவஹின்ன | 100,000 |
| 10 | சிறி தேவகிரி விகாரை | தேவகண்டிய | 100,000 |
| 11 | சிறி சுமங்கலராமய | மினவானகமுவ, போப்பன்ன | 100,000 |
| 12 | சிறி தர்மசக்கர விகாரை | பமுபொல கலுஹல | 100,000 |
| 13 | சிறி புஸ்பராமய | கலுஹல | 100,000 |
| 14 | சிறி மொனாஸ்ரிக் பௌத்த நிலையம் | 5 ஆவது தூண், கஹட்டலியட்ட | 100,000 |
| 15 | சிறி ஜயதம்வெஹர பௌத்த நிலையம் | கலவல, மதுகல்ல | 100,000 |
| 16 | சிறி சமணராமய | போப்பன, களுந்தென்ன | 100,000 |
| 17 | சிற விஜிதாராமய | மதுகல்ல, உடகம்மெத்த, மடுகல்ல | 100,000 |
| 18 | சிறி கங்காராமய | கைக்கவல, மீமுரே | 100,000 |
| 19 | சிறி போதிமாலு விகாரை | பிட்டவல, போப்பன்ன | 100,000 |
| 20 | சிறி சுமித்ராம விகாரை | அளுகொல்ல, ஹேவாதிவல்ல | 100,000 |
| 21 | மிஹிந்து மர்ம விஜய தியான நிலையம் | விஜயசிறீகம, திகன. | 100,000 |
| | **மொத்தத் தொகை** | | **2,100,000** |

## 4.4 சம்புத்த ஜயந்தி சமனேற புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டம்

இக் கருத்திட்டமானது சம்புத்தத்வ ஜயந்தி வருடத்திற்க ஏற்புடையதாகும் என்பதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து துறவுற வாழ்வுக்குள் நுழைந்துள்ள புதிய துறவிகளுக்கும் அவ்வாறே 2014 செப்ரெம்பரின் பின்னர் துறவிகளாகியுள்ள புதிய பிக்குகளுக்குமான விசேடமான புதியதொரு புலமைப்பரிசில் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாகும். மேற்குறித்த காலப்பகுதியில், துறவற வாழ்வில் பிரவேசித்துள்ள துறவிகளின் கல்வி மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கு இக்கருத்திட்டம் எதிர்பார்க்கின்றது. பின்வரும் தகைமைகளினைக் கொண்டுள்ள புதிய துறவிகள் மாத்திரம் இந்தப் புதிய புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

I. 2010 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து 2013 வெசாக் வாரத்தின் இறுதி நாள் வரையிலான காலப்பகுதியில் துறவறம் பூண்டுள்ள பிக்கு ஒருவராக இருத்தல் வேண்டும்.
II. துறவறம் பூண்ட திகதியன்று 18 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
III. துறவறம் பூண்டதன் பின்னர் 3 மாதங்கள் கடந்திருத்தல் வேண்டும்.
IV. பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் புதிய துறவியாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
V. ஒரு விகாரையிலிருந்து ஆகக்கூடுதலாக பத்து துறவிகள்.
VI. 2014 செப்ரெம்பரின் பின்னர் துறவற வாழ்விற்குள் பிரவேசித்துள்ள அனைத்துப் பிக்குகளையும் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்திற்குள் உள்வாங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2016.08.10 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட 76 ஆவது கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் புதிய துறவிகளுக்கான சமனேற புலமைப்பரிசில் அனுசரணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதியதொரு துறவிக்கு 2016 ஜனவரியிலிருந்து ஆக்ஸ்ட் வரையிலான காலப்பகுதிக்கு மாதமொன்றுக்கு ரூபா.500/- இனையும் 2016 செப்ரெம்பரிலிருந்து மாதமொன்றுக்கு ரூபா.700/- இனையும் கொடுப்பனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் கீழ், இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 613 துறவிகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகளும் செப்ரெம்பரிலிருந்து 663 துறவிகளுக்கும் செலுத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இந்த வருடத்தில் ரூபா.4,454,026.50 தொகையானு செலுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டமானது, தபால் அலுவலகங்களினூடாக மேற்கொள்ளப்படும் இக்கருத்திட்டத்திற்கான கொடுப்பனவுகளுக்கான தரகுப் பணத்தினையும் உள்ளடக்குகின்றது.

## 4.5 தம்பதிவ புனித தலங்களுக்கு வருகை தரும் வயதான துறவிகளுக்கான வாய்ப்பினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

முன்னதாக தம்பவிவ யாத்திரிகைகளினை மேற்கொண்டிருக்காத வயதான துறவிகளுக்கு தம்பவிவ யாத்திரிகைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கான உதவுகை நிகழ்ச்சித்திட்டமாக இத்திட்டத்தினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கட்டுப்பாட்டுச் சபையானது இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதில் சிக்கலான சூழ்நிலை காணப்பட்டமையால் இதனை இரத்துச் செய்வதற்குத் தீர்மானித்திருந்தது.

## 4.6 பிக்கு மருத்துவ உதவி நிகழ்ச்சித்திட்டம்

இது இலங்கை பூராகவுமுள்ள அனைத்து துறவிகளுக்கும் மருத்துவ உதவியளிக்கும் முறையாக அமுல்படுத்தப்படுகின்றது. இது, 2559 வெசாக் பண்டிகையினை முன்னிட்டு நாடு பூராகவும் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சையினைப் பெற்று வரும் துறவிகளுக்கான மருத்துவ வசதிகளுக்குத் தேவையான உதவுகையினை வழங்கும் முறையாகவும் அமைகின்றது

நாடு பூராகவுமுள்ள தகைமை வாய்ந்த துறவிகளுக்கான பரிந்துரைகளின அடிப்படையில், பிரதேச செயலாளர் மற்றும் சசனரக்சக சபையின் பதிவாளர் தேரர் ஆகியோரின் பரிந்துரைக்கமைய மருத்து உதவிக்கான உதவுகையாக மாதமொன்றுக்கு ரூபா.5000 / = செலுத்தப்படும்.

2016 இன் ஆரம்பத்தில் ஒரு பிக்குவுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட பிக்கு உதவி உதவுதொகையானது 2016 ஆகஸ்ட் வரையில் 7 பிக்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வண.குருநாகல் உப்பானந்த தேரரானவர் MRI மெடிக்கல் சோதனைக்கான உதவியினை வழங்கியுள்ளார்.





| தொ. இல | துறவியின் பெயர் | நோய் | 2016 இல் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட மாதம் | வருடாந்தம் வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | வண. அதலுபத்த புத்தசார தேரர். | அரந்தலாவையில் பிக்குகள் மீதான தாக்குதலில் அங்கவீனமுற்றவர். | ஜனவரி | 60,000 |
| 2 | வண.வெலிகமுவ சுசீம தேரர் (நாகவனராமய, கொசின்ன, ரம்புக்கன்ன) | உயர் இரத்த அழுத்தம், ஆஸ்த்மா | ஜனவரி | 60,000 |
| 3 | வண. வல்கொவகொட சிறி மெதங்கர விமலபுத்தி தேரர். (கண்டி, மல்வத்து மகா விகாரையின் வல்கொவகொட தேவாலயம்) | பாரிசவாதம் | ஆகஸ்ட் | 25,000 |
| 4 | வண.பிலான் ஜயசாந்த தேரர (தெனியாய கிரிவெல்ந்துல, தெஹிகம்பொல, சிறிசோரதராம விகாரை) | நரம்புத் தளர்ச்சி | ஆகஸ்ட் | 25,000 |
| 5 | வண.பிஹல்பல நாரத தேரர் (மடவலதென்ன, உஹுமிய, தியான நிலையம்) | சிறுநீரகம் மற்றும் ஈரலின் ஒரு பகுதி என்பனவற்றின் தானம் காரணமாக வாழ் நாள் முழுவதும் தேவைப்படும் மருத்துவ சிகிச்சை | ஆகஸ்ட் | 25,000 |
| 6 | வண.டொடங்கொல்லேகம பூங்கரத்ன தேரர் (சுதர்மராம தம்பித்த விஹாரை, முவபிட்டிய, ரம்புக்கனை.) | பாரிசவாதம் | ஆகஸ்ட் | 25,000 |
| 7 | வண.அத்திட்டிய சிறி விஜிதசிறி தேரர். (சிறி அசோகராம விகாரை, மஹியாவை, அஸ்கிரிய, கண்டி) | உடலின் இடுப்பிலிருந்து அடிப்பகுதியின் வலி | ஆகஸ்ட் | 25,000 |
| 8 | வண. குருநாகல் உப்பானந்த தேரர் | MRI மருத்துவ பரிசோதனை | ஆகஸ்ட் | 15,800 |
| | **மொத்த தொகை** | | | **260,800** |


## 4.7 வயதான காலத்தில் துறவுற வாழ்வில் பிரவேசித்துள்ள துறவிகளுக்கு செயன்முறைப் பயிற்சியினை வழங்குதல்.

துறவிகள் வயது ஆக ஆக குருமார் வாழ்வில் பிரவேசிக்கும் போக்கு அதிகரித்து வருவதுடன், குருமார் வாழ்க்கையைப் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் நடந்துகொள்வதால், பாமர பௌத்தர்களால் விரக்தியடைந்து விமர்சிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. மேலும், சாசனத்திற்குக் கேடு விளைவிக்கும் பலவற்றைச் செய்ய ஆசைப்பட்டு சமூகப் பிழை என்ற தத்துவத்திற்கு ஆளான நிகழ்வுகளும் உண்டு. அதன்படி, இத்தகைய துறவிகளுக்கு குருமார் வாழ்க்கையின் மேன்மை மற்றும் மதகுரு மற்றும் பாமரர்களுக்கு இடையிலான வேறுபாடு மற்றும் அடிப்படை சடங்குகள் மற்றும் இறையியல் தம்ம அறிவைப் பற்றிய அறிவை வழங்குவதற்காக இத்தகைய செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன.

குழந்தைப் பருவத்திற்கு அப்பால் குருத்துவ வாழ்விற்குள் பிரவேசித்த துறவிகள் பற்றிய தகவல்கள் பிரதேச செயலகங்களால் சம்பந்தப்பட்ட பிரதேசத்திலுள்ள மாவட்டச் செயலாளர்கள் ஊடாக கோரப்படுகின்றன. கிடைத்த தகவலின் அடிப்படையில், மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மாவட்டச் செயலகத்தின் பௌத்த விவகார இணைப்பாளரின் உதவியுடன் மேற்படி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் ஒழுங்கமைக்கப்படுவதோடு ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறைந்தபட்சம் 10 பிக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

### 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்

| **மாவட்டம்** | **அநுராதபுரம்** |
|---|---|
| அமைவிடம் | கல்னெவ சிறி கங்காராம பிரிவென விஹாரை |
| ஒருங்கிணைப்பு | வணக்கத்துக்குரிய கரகொல்லே பியதசி தேரர் |
| தொழிற்பாடு | வண.லக்ஸஹெனெ ஞானானந்த தேரர் |
| நாட்கள் | 03 |
| பங்குபற்றிய பிக்குகளின் எண்ணிக்கை | 10 |
| இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை | ரூ.341,139/- |





## 4.8 வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான உதவுகை நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் தமிழ் பௌத்த சிறுவர்களின் அறநெறி அறிவினை விருத்தி செய்வதேயாகும். அத்துடன் 2016 இல் யாழ்ப்பாணத்தில் நந்தாராம தமிழ் பௌத்த அறநெறிப் பாடசாலையின் பேணுகைக்காக யாழ்ப்பாணத்திலுள்ள சுண்ணாகம் தமிழ் பௌத்த சங்கத்திற்கு ரூபா.138,000/- அளிக்கப்பட்டுள்ளது.

# 05. வருடாந்த இலக்குகள்

### 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் | வருடாந்த இலக்கு |
|---|---|---|
| 1. | நாட்டில் குறைந்த வசதிகளினைக் கொண்டுள்ள ஆலயங்களுக்கான அனுசரணை வழங்கும் திட்டத்தினை அமுல்படுத்துதல். | அனுசரணையாளர்களாக 20 நிறுவனங்களை அடையாளங் கண்டு நிதிசார் உதவுகையினை வழங்குதல். |
| 2. | சம்புத்துவ ஜயந்தி புலமைப்பரிசில் அனுசரணை வழங்கும் திட்டம். | 700 புதிய துறவிகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதல். |
| 3. | நாடு பூராகவும் வாழும் துறவிகளுக்கு மருத்துவ உதவுகையினை வழங்குதல் | பிரதேச செயலாளர் மற்றும் சசனரக்ஸக சபையின் பதிவாளர் தேரர் ஆகியோர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் நாடு பூராகவுமுள்ள பெருமளவிலான தகைமைவாய்ந்த துறவிகளுக்கு மருத்துவ பரிந்துரையுடன் மருத்துவ உதவுகையினை வழங்குதல். |
| 4 | தமது வயதான காலத்தில் துறவற வாழ்வுக்குச் செல்கின்ற துறவிகளுக்கான பிக்கு வாழ்வு முறைமை தொடர்பில் செயன்முறைப் பயிற்சியினை வழங்குதல் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 4ஆகும். |
| 5 | நாடு பூராகவுமுள்ள குறைவிருத்தி யுடைய விகாரைகளுக்கு சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குதல். | தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் சுகாதார நலன் பேணல் வசதிகளினை வழங்குதல் தொடர்பான அறிக்கையொன்றினைப் பெற்றுக் கொள்ளுதலும் அந்த அறிக்கைக்கமைவாக 50 விகாரைகளுக்கு நிதி உதவுகையினை அளித்தலும். |
| 6. | நாடு பூராகவும் அமைந்துள்ள குறைவிருத்தியுடைய விகாரைகளுக்கான ஆண் துறவி மடங்களைக் நிருமாணிக்கும் கருத்திட்டம். | பிரதேச செயலாளர் மற்றும் சசனரக்ஸக சபையின் பதிவாளர் தேரர் ஆகியோர்களின் பரிந்துரைகளுடன் குறைவிருத்தியுடைய 10 விகாரைகளினை மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்வதன் மூலம் 10 ஆண் துறவி மடங்களை நிருமாணித்தல். |

# 06. புத்தசாசன நிதியம்

## 6.1 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

## வருமான செலவுக் கணக்கு

| வருமானம் | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| முதலீட்டு வருமானம் | 5 | 34,748,961.49 | 34,011,621.29 |
| அறநெறி புத்தகங்களின் விற்பனை வருமானம் | 6 | 214,798.62 | 231,376.67 |
| நன்கொடை மற்றும் ஏனைய வருமானம் | 4 | 74,675.57 | 160,624.84 |
| <u>மொத்த வருமானம்</u> | | 35,038,435.68 | 34,403.622.80 |
| <u>கழிப்பனவு: கருத்திட்ட செலவினம்</u> | | | |
| புதிய பிக்கு நிறுவனங்களுக்கான உதவுகை | | 1,015,000.00 | 1,632,500.00 |
| புதிய பிக்கு நிறுவனங்கள் – மேற்பார்வைச் செலவு | | 14,245.00 | 23,075.00 |
| புதிய அனுசரணை பங்களிப்பு கட்டணம் | | 4,454,026.50 | 2,572,900.00 |
| பிக்கு மருத்துவ உதவி | | 260,800.00 | - |
| சுகாதார நலன் பேணுதல் நடவடிக்கைக்கான நிதி உதவுகை | | 2,100,000.00 | |
| உடுடும்பர காசோலை வழங்கலுக்கான செலவுகள் | | 138,000.00 | |
| தானத்திற்கான புத்தகம் வழங்கல் | | 235,099.90 | - |
| புதிய பிக்கு நிறுவனசார் பரீட்சைகள் | | 8350.00 | 385,370.00 |
| வயது முதிர்ந்த பிக்கு ஒழுக்கமுறை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்ட செலவுகள் | | 341,139.00 | 226,998.00 |
| <u>நிருவாகச் செலவுகள்</u> | | | |
| காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | | 24,866.00 | 15,332.00 |
| கட்டுப்பாட்டுச் சபைக்கான கொடுப்பனவும் | | 342,032.27 | 856,722.20 |
| பதவியினருக்கான சம்பளமும் பிரயாணச் செலவுகள் | | 52,082.00 | 51,843.00 |

| | | |
|---|---|---|
| கணனி பயிற்சிக் கொடுப்பனவு | 218,000.00 | 238,000.00 |
| சம்பாத்தியங்கள் மீது செலுத்தப்பட்ட வரிகள் | | 15,550.09 |
| மேலதிக நேரம் | 14,694.00 | |
| விருந்தோம்பல் செலவுகள் | 15,980.00 | 26,845.00 |
| செலவினம் | 67,566.00 | 58,200.00 |
| **<u>பல்வேறு தேய்மான ஒதுக்கீடுகள்</u>** | | |
| பாதுகாப்பு பெட்டகம் | 4,310.00 | 4,310.00 |
| கட்டிட நிருமாணம் | 87,500.00 | 87,500.00 |
| தளபாட உபகரணம் | 5,775.00 | 5,775.00 |
| ஒலிபெருக்கி | 5,735.00 | 5,735.00 |
| உபகரணமும் பொருத்துக்களும். | 16,294.00 | 16,294.00 |
| **மொத்தச் செலவுகள்** | 9,186,394.77 | 6,458,049.19 |
| **குறித்த ஆண்டுக்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)** | **25,852,040.91** | **27,945,573.61** |

## புத்தசாசன நிதியம்

## 6.2 2016.12.31 இலுள்ளவாறான மீதி செவ்வை பார்த்தல்

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| பாதுகாப்புப் பெட்டகம் | | 57,456.00 | |
| அலுவலக தளபாடம் | | 57,750.00 | |
| பொருத்துகளும் அலுவலக உபகரணங்களும் | | 162,940.00 | |
| தேசி யசேமிப்பு வங்கியில் நிலையான வைப்புக்கள் | | 178,000,000.00 | |
| இலங்கை வங்கி முதலீடு | | 28,070,493.93 | |
| தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | | 38,700,000.00 | |
| தேசிய சேமிப்பு வங்கி புதிய நிறுவனசார் கருத்திட்டம். | | 30,583,224.22 | |
| திறைசேரி உண்டியல் முதலீடு (இலங்கை வங்கி) | | 86,066,406.70 | |
| மக்கள் வங்கி நிலையான வைப்புக்கள் | | 102,731,400.05 | |
| தேசிய சேமிப்பு வங்கியின் மருத்துவ உதவி கருத்திட்டம் | | 15,000,000.00 | |
| தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு கணக்கு இல.01125 | | 3,898,433.91 | |
| ஒலிபெருக்கி | | 45,885.00 | |
| காணிகள் | | 7,000,000.00 | |
| அநுராதபுரத்தில் கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிருமாணங்கள் | | 3,5000,000.00 | |
| புத்த ஜயந்தி நாணய இருப்பு | | 317,400.00 | |
| பல்வேறு பௌத்த நூல்கள் | | 1094,626.49 | |
| பாளி ரீக்க சிங்கள மொழிபெயர்ப்புக்கள் | | 5,010,401.11 | |
| 'பௌத்தத்தின் 1600 வருடங்கள்' புத்தகம் | | 1,080,165.00 | |
| புத்தக விற்பனைச் செலவு | | 1,290,702.38 | |
| நெதிமால பௌத்த கலாச்சார நிலையத்திடமிருந்தான புத்தகங்கள் | | 7,988,635.88 | |
| பாளி ரீக்கவுக்கான ஆங்கில மொழிபெயர்ப்புக்கான நெதிமால பௌத்தம் | | 1,080,165.00 | |
| பௌத்த கலாச்சார நிலையத்தில் புத்தக விற்பனை | | 3,955,745.33 | |
| பெறப்பட வேண்டிய திறைசேரி உண்டியல்கள் வட்டி | | 2,384,330.33 | |
| பெறப்பட வேண்டிய தேசிய சேமிப்பு வங்கி வட்டி | | 8,415,434.35 | |
| புதிய கார்டியன் வட்டிப் பெறுவனவுகள் | | | 3,051,661.11 |
| புதிய நிறுவனசார் கருத்திட்டங்களின் பெறப்பட வேண்டிய வட்டி | | 1,258,484.35 | |
| தேசிய சேமிப்பு வங்கி – மருத்துவ உதவிகள் நிலையான வைப்புக்களுக்காக பெறப்பட வேண்டிய வட்டி | | 479,178.08 | |
| பெறப்பட வேண்டிய மக்கள் வங்கி நிலையான வைப்பு | | 6,392,423.08 | |
| புதிய நிறுவன வட்டிப் பெறுவனவுகள் | | | 2,897,037.02 |
| கூட்டுறவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி சங்கத்திற்கு எரிபொருளுக்கான பெறுகைகள் | | 0.00 | |
| றோயல் ஆசியட்டிக் சொசைற்றி | | 7282.00 | |

| | | | |
|---|---|---|---|
| நிறுத்தி வைத்த சம்பாத்தியங்களின் வட்டி மீதான செலுத்தத்தக்க வரிகள் | | 656,427.96 | |
| மத்திய வங்கி | | 16,479,971.22 | |
| இலங்கை வங்கி | | 672,936.96 | |
| செலுதப்பட வேண்டிய புதிய நிறுவன சார் கொடுப்பனவுகள் | | | 425,000.00 |
| செலுத்தப்பட வேண்டிய புதிய அனுசரணை புலமைப்பரிசில்கள் | | | 1,415,623.00 |
| பாளி ரீக்காவுக்கான நெதிமால பௌத்த கலாச்சார நிலையம் | | | 544,409.50 |
| "பௌத்தத்தின் 1600 வருடங்கள்" புத்தகத்திற்கான கட்டுரைகளை வழங்குதல். | | | 1,168,025.00 |
| சுனாமி உதவி | | | 1,348,796.00 |
| புத்தசாசன நிதியம் | | | 512,425,953.15 |
| தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல.100011259873 வட்டி | | | 203,573.56 |
| தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல. 100010101125 வட்டி | | | 141,027.34 |
| தேசிய சேமிப்பு வங்கி கணக்கு இல 100011259873 | | 717,240.78 | |
| புதிய அனுசரணை புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் | | 4,454,026.50 | |
| புதிய நிறுவன கொடுப்பனவுகள் | | 1,015,000.00 | |
| பிக்கு மருத்து உதவி கொடுப்பனவு | | 260,800.00 | |
| புதிய நிறுவன பரீட்சைக் கணக்கு | | 8350.00 | |
| அலுவலக சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | | 270,097.27 | |
| தமிழ் அளநெறி பாடசாலைக்கான நிதி உதவுகை | | 0.00 | |
| வயதான பிக்கு நிகழ்ச்சித்திட்ட செலவினம் | | 341,139.00 | |
| சுகாதாரம் பேணுதலுக்கான நிதி உதவுகை | | 2,100,000.00 | |
| கட்டிடங்களின் திரண்ட சிதைவு | | | 262,500.00 |
| பாதுகாப்பு பெட்டகத்தின் திரண்ட தேய்மான ஒதுக்கீடு | | | 25,860.00 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணத்தின திரண்ட சிதைவு | | | 17,325.00 |
| ஒலிபெருக்கிகளின் திரண்ட சிதைவு | | | 17,205.00 |
| பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரண தேய்மானத்துக்கான ஒதுக்கீடு | | | 48,882.00 |
| கட்டிடங்கள் | | 87,500.00 | |
| சேதமடைந்த பெட்டகம் | | 4310.00 | |
| தளபாடம் மற்றும்அலுவலக உபகரணங்களின் சிதைவு | | 5775.00 | |
| ஒலிபெருக்கித் தேய்மானம் | | 5735.00 | |
| பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் தேய்மானம். | | 16,294.00 | |
| தேசிய சேமிப்பு வங்கி நேரடி வைப்பு வட்டி | | | 14,455,307.03 |

| | | | |
|---|---|---|---|
| இலங்கை வங்கி திறைசேரி உண்டியல் வட்டி | | | 2,501,883.61 |
| இலங்கை வங்கி வட்டி | | | 2,149,639.26 |
| மக்கள் வங்கி வட்டி | | | 8,103,298.32 |
| மருத்துவ உதவி | | | 1,242,534.24 |
| புத்தக விற்பனை வருமானம் | | | 1,505,501.00 |
| நன்கொடைகள் | | | 14,472,266.18 |
| நன்கொடை பெறுவனவுகள் | | | 5,297,972.18 |
| நன்கொடை விடுவிப்பு | | 5,223,296.61 | |
| உடுடும்புர காசோலை வறியோக வைபவம் | | 138,000.00 | |
| புதிய நிறுவனங்களின் மேற்பார்வைச் சபையின் கொடுப்பனவுகள் | | 14,245.00 | |
| விருந்தோம்பல் செலவு | | 15,980.00 | |
| ஏனைய செலவுகள் | | 67,566.00 | |
| பிரயாணச் செலவுகள் | | 52,082.00 | |
| காகிதாதி கொள்வனவு | | 24,866.00 | |
| கணனி கொடுப்பனவு | | 218,000.00 | |
| மேலதிக நேரம் | | 14,694.00 | |
| தேசிய சேமிப்புக்கள் கார்டியன் அனுசரணையினால் பெறப்பட வேண்டிய வட்டி | | 621,698.00 | |
| பெறப்பட வேண்டிய இலங்கை வங்கி வட்டி | | 1,117,193.79 | |
| **மொத்தம்** | | **573,724,279.50** | |

# புத்தசாசன நிதியம்

## 6.3 2016.12.31 இலுள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | 1 | 10,452,259.00 | 10, 571,873.00 |
| முதலீடு | 2 | 483,767,199.59 | 483,124,345.78 |
| தேறிய நடைமுறைச் சொத்து | 3 | 59,879,597.65 | 34,550,796.53 |
| | | **554,099,056.24** | **528,247,015.31** |
| **இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது** | | | |
| புத்தசாசன நிதியம் | | 538,277,994.06 | 512,425,953.13 |
| பல்வேறு நன்கொடைகள் | 4 | 14,472,266.18 | 14,472,266.18 |
| சுனாமி உதவி | | 1,348,796.00 | 1,348,796.00 |
| | | **554,099,056.24** | **528,247,015.31** |

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட இத்தகைய நிதிக் கூற்றுக்கள் எதிர்காலத்தில் அங்கீகாரத்திற்காக புத்தசாசன நிதியத்தினால் சேகரிக்கப்படும் முதலாவது கட்டுப்பாட்டுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

புத்தசாசன நிதியத்தின் கட்டிப்பாட்டுச் சபையானது புத்தசாசன நிதியத்தின் 2016.12.31 இலுள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகை மற்றும் கணக்குக் கூற்றுக்களுக்குப் பொறுப்பு வாய்ந்ததாகும்.

ஜீ.என்.முனவீர
விதான
கணக்காளர்
புத்தசாசன நிதியம்

டபிள்யூ.ரி.எச்.ருசிர
செயலாளர்
புத்தசாசன நிதியம்

தேசபந்து பேராசிரியர்.கபில குணவர்தன
செயலாளர்
பொறுப்பாளர்
புத்தசாசன அமைச்சு
கட்டுப்பாட்டுச் புத்தசாசன நிதியத்தின்
உறுப்பினர்
கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்

ஜீ.பி.கரவிட்ட
பொது நம்பிக்கைப்
புத்தசாசன நிதியத்தி ன்
சபை

# 6.4 கணக்காய்வு அறிக்கை

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

**எனது இல -** සී.එස්/ ඩී/ බීඑස්එෆ්/01/2016/එෆ්ජී **திகதி –** 2021 மார்ச் 10

செயலாளர்,

புத்தசாசன நிதியம்

**2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான புத்தசாசன நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

மேற்குறித்த அறிக்கையானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்:1. செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

2. செயலாளர், நிதி அமைச்சு

செயலாளர்,
புத்தசாசன நிதியம்.

<u>2016 டிசம்பர் 31 இல் முடிடைந்த ஆண்டுக்கான புத்தசாசன நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.</u>

2016 டிசம்பர் 31 இலுள்ளவாறான புத்தசாசன நிதியத்தின் ஐந்தொகை மற்றும் 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் என்பன குறித்த திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கங்கள் என்பனவற்றினைக் கொண்டுள்ளன. 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இல. புத்தசாசன நிதியச் சட்டத்தின் உறுப்புரை 12(4) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உறுப்புரை 154(3) கொண்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக, எனது பணப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த அறிக்கையானது மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானங்கள் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

1.2 <u>நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு</u>

இலங்கையின் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக இத்தகைய நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதும், நியாயமான சமர்ப்பிப்புகளைச் செய்வதும், மோசடிகள் அல்லது தவறான விளக்கங்கள் காரணமாக எழக்கூடிய கணிய ரீதியான பிழையான அறிக்கைகள் இல்லாமல் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

1.3 <u>கணக்காய்வாளரின் பொறுப்பு</u>

எனது கணக்காய்வின் அடிப்படையில் இத்தகைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தினைத் தெரிவிப்பது எனது கடமையாகும். நான் எனது கணக்காய்வினை உயர்தர கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச சகணக்காய்வு நியமங்களுக்கமைவாக (ISSAI 1000-1810) நடாத்தியுள்ளேன். இத்தகைய நியமங்கள் ஒழுக்கவியல் கோட்பாடுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குமென நான் எதிர்பார்ப்பதுடன் நிதிக்கூற்றுக்கள் தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டு கணிய ரீதியாக சரியான கூற்றுக்களாக உள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வானது திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது. இத்தகைய நியமங்கள் நான் நெறிமுறைகள் மற்றும் தணிக்கையின் தேவைகளுக்கு ஏற்ப இணங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது மற்றும் நிதிநிலை அறிக்கைகள் அளவுக்கதிகமாக தவறான அறிக்கைகளிலிருந்து விடுபடுவதை உறுதிசெய்ய திட்டமிட்டு செயல்படுத்தப்படும்.

கணக்காய்வு என்பது நிதிநிலை அறிக்கைகளில் உள்ள பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்களுடன் தொடர்புடைய கணக்காய்வு சான்றுகளைப் பெறுவதற்கான நடைமுறைகளை நிறைவேற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நடைமுறைகள், மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படக்கூடிய கணக்காய்வாளரின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை,

இந்த இடர் மதிப்பீடுகளில், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, காலத்திற்குக் காலம் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளினை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் நிதி கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதுடன் நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தக் கருதுவதில்லை.

கணக்காய்வானது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளினை மதிப்பீடு செய்தல் என்பவற்றினையும் அவ்வாறே, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது. நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வுச் சான்றானது போதுமானதெனவும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான பொருத்தமான அடிப்படையினையும் வழங்குகின்றது என்பதனையும் நம்புகின்றேன்.

1.4 <u>புள்ளிவிபர அபிப்பிராயத்துக்கான அடிப்படை</u>

எனது அபிப்பிராயமானது இந்த அறிக்கையின் பந்தி 2.2 இனை அடிப்படையாகக் கொண்டதாகும்.

2. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

2.1 <u>புள்ளிவிபர அடிப்படையிலான அபிப்பிராயம்</u>

நான், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக 2016 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றினையும் 2016 டிசம்பர் 31 இலுள்ளவாறான புத்தசாசன நிதியத்தின் உண்மைத் தன்மையினையும் நியாயத் தன்மையினையும் பிரதிபலிக்கும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இனால் பாதிக்கப்பட்டவை தவிர்ந்த நிதிக் கூற்றுக்கள் என நான் கருதுகின்றேன்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வு ஆண்டுக்கான வங்கி வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் கணக்குகளில் ரூபா.4,407,978 ஆக குறைவாக காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2. கணக்காய்வுக்கான போதிய அதாரமின்மை

கீழ்க்காணும் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் காட்டப்பட்ட ஆதாரம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே, அவற்றினை வவுச்சரிடுவதும் ஏற்றுக் கொள்வதும் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் போதாமையினால் திருப்பதிகரமாக மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை.

| தொ.இ | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (i) | புத்த தர்ம நூல்கள் | 11,605,348 | மதிப்பாய்வுச் சபை அறிக்கை |
| (ii) | சுனாமி நிவாரணம் | 1,348,796 | விரிவான தகவல் |
| (iii) | முற்பணங்களும் ஏனைய அறவிடத்தக்க பணங்களும் | 13,031,848 | மீதி உறுதிப்படுத்தல்களும் வயது பகுப்பாய்வுகளும் |
| (iv) | நடமாடும் பொறுப்புக்கள் | 1,712,435 | மீதி உறுதிப்படுத்தல்களும் வயது பகுப்பாய்வுகளும் |
| (v) | நிலையான சொத்துக்கள் | 10,452,259 | நிலையான சொத்து பதிவேடு |
| (vi) | செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள், சொத்து தேய்மானம் மற்றும் விற்பனைகள் கணக்குகளுடன் தொடர்புடைய மாற்றல்கள். | 3,630,939 | நாளேடுகள் மற்றும் அது தொடர்பான வவுச்சர்கள் |

3. <u>நிதிசார் மீளாய்வு</u>

3.1. <u>நிதிசார் பெறுபேறுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில், மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் நிதிசார் பெறுபேறுகள் ரூபா.25,852,041 மிகையினைக் காட்டியுள்ளது. முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா. 27,945,573 இன் மிகையுடன் ஒப்பிடுகையில், இது ரூபா.2,093,532 குறைவாகும். ரூபா.634,813 இனால் அதிகரித்துக் காணப்பட்ட முதலீட்டு வட்டி வருமானம் உள்ளடங்கலாக, மொத்தப் புரள்வானது இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக அமைந்திருந்தது.

4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>

4.1 <u>செயலாற்றுகை</u>

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் நிதியத்தின் வருமானமாக ரூபா.35,038,436 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள போதிலும், நிதியத்தின் நோக்கங்களுக்காக 26% அதாவது ரூபா.9,186,395 மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. மிகுதியான காசானது வருடாந்தம் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இலுள்ளவாறான முதலீட்டின் மொத்தப் பெறுமதி ரூபா.483,767,200 ஆக இருந்துள்ளது. நிதியத்தின் தொழிற்பாடானது புத்தசாசனத்தினைப் பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்கும் பொருத்தமான வகையில் நிதியளிப்பினை மேற்கொள்வதாக இருந்துள்ளதுடன், நிதியத்தினால் வருடாந்தம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானத்திற்கு ஏற்ற வகையில் சமமான முறையில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தவறியுள்ளது.

(ஆ) அநுராதபுர பிரதேசத்திலுள்ள பசவக்குளம எனம் இடத்தில் 02 ஏக்கர்கள், 01 ரூட் மற்றும் 13 பேர்ச்சுக்களினைக் கொண்ட காணி நிதியத்திற்குச் சொந்தமாகவுள்ளதுடன் அதில் நிருமாணிக்கப்பட் கட்டிடங்கள் ரூபா.50/- வருடாந்த வாடகையில் 1994 ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று சிறி அநுராதபுரஅம்தியபன சங்கிரஹ சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு (இ) மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்ட நிலம் அமைந்துள்ள பகுதியில் உள்ளூராட்சியினால் மேற்கொள்ளப்படும் வருடாந்த நில மதிப்பீடு மற்றும் பிற காரணிகளை கணக்கில் எடுத்துக்கொண்டு குத்தகையை திருத்தியமைக்க குத்தகைதாரருக்கு அதிகாரம் உள்ளது. இந்த சொத்துக்களின் பெறுமதி 2014 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கையின்படி ரூபா.10,500,000 ஆகும். எவ்வாயானும், வரி சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின் போது அவதானிக்கப்படும் குறைபாடுகள் தொடர்பில் நிதியத்தின் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது.

(அ) நிதியங்களின் முதலீடும் பயன்பாடும்.

(ஆ) கணக்கீடு

(இ) நோக்கங்களின் அடிப்படையிலான செயலாற்றுகை மட்டம்

(ஈ) வரவு செலவுத் திட்ட ஆவணக் கட்டுப்பாடு.

டப்பிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி